Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள் சங்.125:1 மே 2017 No.5

பரிசுத்தரின் அறிவு

The knowledge of the Holy

A. W .Towzer

சபை ஒரு காலத்தில் தன்னை தேவசித்தத்திற்கு ஒப்படைத்திருந்தது. இப்போதோ மனிதரை ஆராதிக்க ஆரம்பித்து விட்டது. இது மனப்பூர்வமாக ஏற்பட்ட மாற்றமல்ல, கொஞ்சம் கொஞ்சமாக தன்னை அறியாமலே இந்த ஆபத்தான சூழ்நிலைக்கு வந்து விட்டது.

தேவனை தரம் தாழ்வாக நடத்துவது பல்வேறு தீமைகளுக்குக் காரணமாயிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்வில் ஒரு புதிய தத்துவம் இந்த அடிப்படைத் தவறிலிருந்து எழும்பி நமது மார்க்க சிந்தனையை மாற்றி விட்டது.

தெய்வீக உணர்வை இழந்த படியால் மார்க்கத்தைக் குறித்த பிரமிப்பும், தெய்வீகப் பிரசன்னத்தின் உணர்வும் அகன்று விட்டன. ஆராதனையின் ஆவியை இழந்து, அமைதியோடு பாடி ஆராதிக்கும் நிலையிலிருந்து தவறி விட்டோம். ஆவியின் வாழ்வை அனுபவிக்கும் அல்லது ஆதரிக்கும் கிறிஸ்தவர்களை தற்கால கிறிஸ்தவம் உருவாக்குவதில்லை. "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" *சங்.46:10.*

மறுபடியும் நமது ஆவிக்குரிய நிலையை திரும்பப் பெற அதற்குரிய காரணத்தை கண்டுபிடித்து, சத்தியம் போதிக்கும் முறையில் சரிப்படுத்த வேண்டும். **நமது குறைகளுக்கெல்லாம் காரணம் பரிசுத்தரின் அறிவில் ஏற்பட்ட பின்னடைவாகும்.** தேவனுடைய மகத்துவத்தை மறுபடியும் கண்டு பிடிப்பது இதற்கு நிவாரணமாகும். தேவனைக் குறித்த நமது சிந்தை தவறாகவும் பொருத்தமற்றதாகவும் இருக்கும் போது நமது சன்மார்க்க நெறிகளும் உள்ளான மனப்போங்குகளும் பாதுகாக்கப்பட முடியாது. நாம் நமது ஆவிக்குரிய வலிமையை மறுபடியும் கொண்டு வர தேவன் நமக்கு மிக அருகிலிருப்பதாக சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்.

ஏன் நாம் தேவனைக் குறித்து சரியான எண்ணம் கொள்ள வேண்டும்

தேவனைக் குறித்து நாம் சிந்திக்கும் போது நம்மைப் பற்றிய எண்ணங்களே மிக முக்கியமாகக் காணப்படுகின்றன.

எந்த ஒரு மனிதனும் மார்க்கத்திற்கு மேலாக உயர்ந்ததில்லை, மற்றும் மனிதனது ஆவிக்குரிய சரித்திரம் எந்த ஒரு மார்க்கமும் தேவனைக் குறித்த அபிப்பிராயத்தை விட மேலானதாக இருந்ததில்லை என்று காண்பிக்கிறது. ஆராதனை என்பது சுத்தமாகவோ அல்லது அசுத்தமானதாகவோ மாற, ஆராதிக்கிறவர் தேவனைக் குறித்து உயர்வாகவோ, தாழ்வாகவோ நினைக்கும் எண்ணமாயிருக்கலாம்.

இக்காரணத்தினாலே சபைக்கு முன்னாலிருக்கும் முக்கிய கேள்வி எப்போதும் தேவனைப் பற்றியதே. மற்றும் மனிதனைப் பற்றிய மிகவும் ஆச்சரியமான உண்மை ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவன் எதை சொல்லுகிறான் அல்லது எதைச் செய்கிறான் என்பதில்ல, அவனது உள்ளான மனம் தேவன் எப்படியிருக்க வேண்டுமென்று கருதுகிறானோ அதன் அடிப்படையிலேயே உள்ளது. நாம் ஆத்துமாவின் ஒரு இரகசிய நியமப்படி நமது மனதிலிருக்கும் தேவனுடைய சாயலுக்கு நேராக முன்னேறுகிறோம். இது சபையிலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் காணப்படுகிறது. சபை எப்போதும் வெளிப்படுத்துவது தேவனைக் குறித்த தனது அபிப்பிராயம். அதனுடைய மிக முக்கிய செயல் தேவனைக் குறித்து சொல்வது அல்லது சொல்லாமல் விட்டு விடுவது. அதன் அமைதி பல வேளைகளில் அதன் பேச்சுத் திறனை விட அதிகமானது. தேவனைக் குறித்த சாட்சியை வெளிப்படுத்தாமல் சபை இருக்க முடியாது.

'தேவனைக் குறித்து சிந்திக்கும் போது உங்கள் மனதில் தோன்றுவது என்ன?' என்ற கேள்விக்கு முழுமையான விடை எந்த மனிதனிடமிருந்தும் நாம் பெற முடியாது. அந்த மனிதனின் ஆவிக்குரிய எதிர்காலத்தை நிச்சயமாக நாம் முன் கூறலாம். நமது பிரசித்தி பெற்ற மார்க்கத் தலைவர்கள் இன்று தேவனைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? அதிலிருந்து சபை நாளை எங்கு நிற்கப் போகிறது என்பதை முன் குறிப்பிட முடியும்.

நமது மனம் சந்தோஷப்படக் கூடிய மிகப் பெரிய எண்ணம் தேவனைக் குறித்தது. இன்னும் மிக கனமான வார்த்தை நம் உள்ளத்தில் எந்த பாஷையில் காணப்பட்டாலும் அது தேவனுக்காக பேசப்படும் வார்த்தை. அவரது சாயலில் படைக்கப்பட்ட மனிதனுக்கு தேவன் அளித்த வரங்கள், சிந்திப்பதும், பேசுவதும் என்றால் மிகையல்ல. இவை தேவனோடு மிகவும் நெருக்கமானவை. எனவே அவரன்றி நம்மால் அடையக் கூடியவையல்ல. யோவான் *1:1*-ல் 'ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடமிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்று படிக்கிறோம். தேவன் பேசியதால் நாமும் பேசுகிறோம். அவரில் வார்த்தையும் அபிப்பிராயமும் பிரிக்க முடியாதவை.

தேவன் நமக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தவராயிருந்தால் தேவனைக் குறித்த நமது எண்ணமும் அதே போலிருக்கும். அவரைக் குறித்த நமது எண்ணங்களோடு நமது வார்த்தை களை ஒப்பிடுவதில் பயனில்லை. தேவனைப்பற்றிய நமது உண்மையான அபிப்பிராயம் பாரம்பரிய மார்க்க சீர்கேடுகளுக்கு அடியில் மறைந்து கிடக்கின்றன. எனவே புத்தி பூர்வமான உத்வேகத்துடன் அதைத் தேட வேண்டும். பாரத்தோடு சுயபரிசோதனை செய்து இறுதியாக அது வெளியே கொண்டு வரப்பட வேண்டும். அப்போதுதான் நாம் தேவனைப்பற்றிய என்ன எண்ணம் கொண்டிருக்கிறோம் என்பது வெளிப்படும்.

துணிச்சலான வேதனை அளிக்கும் சுய பரிசோதனை மூலமாகவே நாம் தேவனைப் பற்றி என்ன நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்பதை கண்டு பிடிக்க முடியும்.

தேவனைப் பற்றிய சரியான கருத்து ஒழுங்குப்படுத்தப்பட்ட திரு மறைக் கல்வியில் மட்டுமல்ல, கிறிஸ்தவன் செயல் முறையில் வாழுவதையும் பொறுத்தது. அஸ்திபாரம் சரியாயிராவிட்டால் முழு தேவாலயமும் விழுந்து விடலாம். தேவனைக் குறித்த பூரண மற்ற தாழ்வான எண்ணங்களுக்குக் காரணமான சிறிய தவறு அல்லது நடை முறை ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட வேண்டும்

தேவனும் நமது பிரச்சனையும்

தேவனைப் பற்றிய கிறிஸ்தவனின் இன்றைய கருத்து உன்னதமான தேவனின் மகத்துவத்திற்கு மிகவும் தாழ்வானவை. எனவே ஆழமற்ற விசுவாசிகளாயிருப்பவர்களுக்கு இது குழப்பமானது.

தேவனது சரியான விசுவாசத்திற்கு வருகிற ஒரு மனிதன் உலக பிரகாரமான பத்தாயிரம் பிரச்சனைகளிலிருந்து விடுபடுகிறான். இந்த விஷயங்கள் அவனை நீண்ட நாட்களுக்கு கவலைப்படுத்துவதில்லை. ஆயினும் திரளான பாரங்கள் அவனிலிருந்து எடுக்கப்பட்டாலும் ஒரு

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

"அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,

உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,

நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்கு சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது".

சங்கீதம் 103:3-5.

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2017-ம் ஆண்டின் மேய் மாத வருகையின் தூதன் இதழுக்காக நான் ஆண்டவரை நன்றியோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன். இன்னமும் *2017*-ம் ஆண்டு முடிய *7* மாதங்கள் மாத்திரமே இருக்கிறது என்பதை எனது அருமையான வாசகருக்கு அன்போடு தெரிவிக்க அடியான் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு இதுவரைக்கும் அன்பின் ஆண்டவருக்காக நீங்கள் செய்தது என்ன?

வாணாள் எல்லாம் வீணாளாக
சென்று போயிற்றே! ஐயோ!
மோசம் போனேன்! மிட்ட நன்மை
அழுதாலும் வருமோ?
ஆதீமா ஒன்றும் ரக்ஷிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா
வெறுங்கையனாக உம்மைக்
கண்டு கொள்ளல் ஆகுமா!
கரையேறி உமதண்டை
நிற்கும் போது ரக்ஷகா
உதவாமல் பலனற்று
வெட்கப்பட்டு போவேனோ
ஆதீதுமாக்களீர் பேரில் வாஞ்சை
வைத்திராமல் சோம்பலாய்
காலங்கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நிர்ப்பந்தராய்

ஏப்ரல் மாதம் *15*-ம் தியதி சனிக்கிழமை **ஏரல்** உபவாச ஜெபம் முடிந்த பின், *16*-ம் தியதி ஞாயிற்றுக்கிழமை இந்த ஆசிரியர் கடிதத்தை உங்களுக்கு எழுத ஆண்டவர் இரக்கம் பாராட்டினார். உபவாச ஜெபத்தை தேவன் அபரிமிதமாய் ஆசீர்வதித்தார். தேவன் கிருபையாய் எங்கள் அனைவரையும் விசேஷித்த விதமாக பயன்படுத்தினார். உபவாச ஜெபத்தின் முதல்பகுதியில்பிரசங்கிக்கப்பட்டமுக்கியமானவேத வசனம்,"**பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று,. . . . (ஆகார்) சத்தமிட்டு அழுதாள்**" Let me not see the death of the child, ...and (Hagar) lift up her voice, and wept ஆதி.*21:16*. உபவாச ஜெபத்திற்கு வந்த தேவ ஜனங்கள் மிகவும் தொடப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

சகோ.**சுந்தர்ராஜ்**, சகோ.**ஜோசப் டேனியல்**, சகோ. **சந்தியாக் ஜோசப்**, சகோ.**தர்மராஜ்** ஆகியோருடன் ஏரல் எழுப்புதல் ஜெப ஐக்கியத்தினர் மிகவும் நேர்த்தியாய் ஒரு மண்டபத்தை வாடகைக்கு அமர்த்தி, ஒலி அமைப்பை ஏற்படுத்தி, இன்னும் தண்ணீர் போன்ற வசதிகளை ஒழுங்குபடுத்தி யிருந்தார்கள், தேவனுக்கே மகிமை செலுத்துகிறேன்.

கர்த்தருக்குச் சித்தமானால் ஏப்ரல் மாதம் *21*-ம் தியதி மாலை நாகர்கோவிலிலிருந்து புறப்பட்டு குஜராத் சென்று, *23-04-2017* அன்று வட இந்திய மிஷனெரி சங்கம் (NIMS) சார்பில் புதிதாக கட்டப்பட்ட ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் கலந்து கொள்ளவும், மிஷன் களங்களை பார்வையிடவும் அழைக்கப்பட்டிருக்கிறேன். எனக்காகவும், பிரயாணங்களுக்காகவும் ஜெபிக்க மிகவும் அன்புடன் கேட்கிறேன். மேலும் விபரங்களை கர்த்தருக்குச் சித்த மானால் அடுத்த இதழில் எழுதுவேன்.

கர்த்தருக்குச் சித்தமானால் மேய் மாதம் T.R. பட்டினத்தில் நடைபெற இருக்கும் உபவாச ஜெபத்திற்காக தேவனு

(8-ம் பக்கம் பார்க்க)

எழுப்புதலுக்காக இதய கதறல் 2017
(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
மேய்	20-05-2017 3-வது சனி	புது வாழ்வு எல்லாம் இயேசுவுக்கே திருச்சபை T.R. பட்டினம், காரைக்கால்
ஜூன்	03-06-2017 1-வது சனி	True Life Mission, நாகர்கோவில்
ஜூலை	15-07-2017 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை, நெல்லிக்குப்பம். கடலூர்
ஆகஸ்ட்	19-08-2017 3-வது சனி	இயேசு நம்மோடு சபை, கருங்கல், குமரி மாவட்டம்
செப்டம்பர்	16-09-2017 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, மணலி, சென்னை
அக்டோபர்	07-10-2017 1-வது சனி	மாரநாதா ஜெபவீடு, பொள்ளாச்சி
நவம்பர்		காந்தி நகர் C.S.I. சபை திருநெல்வேலி
டிசம்பர்	02-12-2017 1-வது சனி	I.P.C சபை மார்த்தாண்டம்

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018
(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
ஜனவரி		
பிப்ரவரி	17-02-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை கோயம்பத்தூர்
மார்ச்	17-03-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை அரியா குப்பம்,பாண்டிச்சேரி
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile : 95432 21008

வங்கி கணக்கு எண்

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்.
email :
varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெலமான நித்திய பாரம் அவனை அழுத்தலாம். அந்த பாரம் மிகப் பெரிய தாயிருக்கும். அந்த பாரம் தேவனுக்கு நான் கடமைப்பட்டவன் என்பதாகும். அதில் உடனடி மற்றும் வாழ்நாள் முழுவதும் தேவனை முழுமனதோடும், முழு ஆத்துமாவோடும் நேசிக்கவும், முழுமையாக அவருக்குக் கீழ்ப்படியவும், ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய விதமாக அவரை ஆராதிப்பதும் அடங்கும். அந்த மனிதனின் உழைப்பு மிகுந்த மனச்சாட்சி இவற்றில் எதையுமே செய்ய வில்லை, ஆனால் சிறு பருவத்திலிருந்தே கெட்ட நடவடிக்கைகளால் மகத்துவமான தேவனுக்கு எதிராகக் குற்றவாளியாயிருப்பதால், உள்ளான அழுத்தம் தன்னையே குற்றப்படுத்தி தாங்க முடியாததாகி விடுகிறது .

இந்த பாரத்தை சுவிசேஷம் மனதிலிருந்து அகற்றி சாம்பலுக்குப் பதிலாக அழகையும், பாரமான ஆவிக்குப் பதிலாக துதியின் வஸ்திரத்தையும் அளிக்கிறது. ஆனால் சுமையின் பாரம் உணரப்படாவிட்டால் சுவிசேஷம் மனிதனுக்குப் பொருட்டாயிருப்பதில்லை. மேலும் தேவனுடைய காட்சி உயர்வாக நிறுத்தப்படுவதைக் காணாவிட்டால் பாரமோ கஷ்டமோ இருப்பதில்லை. தேவனைப் பற்றிய தாழ்வான எண்ணமுடையவர்கள் கேட்கிற சுவிசேஷத்தை அது அழித்து விடுகிறது.

விக்கிரகாராதனையாகிய பாவம்

விக்கிரகாராதனையை தேவன் அதிகமாக வெறுக்கிறார். விக்கிரகாராதனை செய்யும் இருதயம் உள்ளவர்கள், தேவன் இன்னொருவர் (தேவனல்ல) என்றும் எண்ணுவதால் அது கொடிய பாவமாகிறது. தேவனுக்குப் பதிலாக ஒவ்வொரு பொருளை தேவனாக்கி விடுகிறது. தேவன் அதிகமாக வெறுக்கும் ஒரு பாவம் விக்கிரகாராதனை. அவர் தன்னைவிட மாறுபட்ட ஒருவர் என்ற எண்ணம் மிகப் பெரிய பாவமாகிறது. சங்.50:21-ல் பொல்லாதவர்களைக் குறித்து, "உன்னைப் போல நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்" என்று கடிந்து கொள்கிறார்.

விக்கிரகாராதனை என்பது காணக்கூடிய பொருட்களின் முன்பு முழங்காற்படியிடுவது மட்டும் என்று நினைக்கிறோம். எனவே கலாச்சாரத்தில் முன்னேற்றமடைந்தவர்கள் இதைச் செய்வதில்லை என்றும் கருதுகிறோம். இது தவறு. தேவனைக் குறித்த தகுதியற்ற எண்ணங்களை நாம் வளர்க்கிறோம். இது உள்ளத்தில் ஆரம்பித்து வெளிப்படையான ஆராதனை இல்லாத இடங்களில் ஆரம்பிக்கிறது. ரோ.1:21-ல் "அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" என்று பவுல் கூறுகிறார்.

பின்பு மனிதன், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய வற்றின் சாயலில் விக்கிரகங்கள் செய்யப்பட்டு வணங்கப்பட்டன. இந்தச் சீரழிவு செயல் மனதில்தான் முதலில் ஏற்பட்டது. தேவனைப் பற்றி தவறான அபிப்பிராயங்கள் மாசடைந்த தண்ணீரின் ஊற்றிலிருந்து பாய்ந்து வரும். விக்கிரகாராதனையாகிய ஓட்டம் தேவனைப் பற்றிய தவறான எண்ணங்கள் மட்டுமல்ல, அவர்களே விக்கிரகாராதனைக்காரராயிருக்கின்றனர். விக்கிரகாராதனைக்காரர் தேவனைப் பற்றிய காரியங்களை மனோபாவனை செய்து கொண்டு அவை உண்மை யென்று செயல்படுகிறார்கள்.

தேவனைப் பற்றிய நெறி தவறிய கருத்துக்கள் அவை தோன்றிய மார்க்கத்தையே அழிக்கின்றன. இஸ்ரவேலரின் நீண்ட பயணம் இதைத் தெளிவாகக் காண்பிக்கிறது. சபையின் சரித்திரமும் இதை உறுதிப்படுத்துகிறது. எனவே சபைக்குத் தேவையானது தேவனைப் பற்றிய உயரிய எண்ணம். அந்த எண்ணம் நலிவடையும் போது சபை அதனுடைய தொழுகை, அதன் சன்மார்க்க அந்தஸ்து ஆகியவையும் நலிவடைகின்றன.

எந்த கிறிஸ்தவ சபையும் வீழ்ச்சியடையுமுன் அதன் எளிய வேத சாஸ்திரத்தில் ஒரு தவறு ஏற்பட வேண்டும். எனவே தேவன் யாரைப் போலிருக்கிறார்? என்ற கேள்விக்கு தவறான விடையைப் பெற்று அதிலிருந்தே விலகிச் செல்கிறது. சபை ஒரு நல்ல பிரமாணத்தைப் பற்றிக் கொண்டிருந்தாலும் செயல்முறை பிரமாணம் தவறாகி விடுகிறது. எனவே இவர்களைப் பின் பற்றுகிறவர்கள் தேவன் அவர் உண்மையாக இருப்பதை விட வித்தியாசமானவர் என்று நம்புகிறதற்கு ஏதுவாகிறது. இந்த மதபேதம் பயங்கரமான தந்திரமாயிருக்கிறது.

கிறிஸ்தவ சபையின்மேல் வைக்கப்பட்டிருக்கும் பாரமான கடமை தன்னை சுத்திகரிப்பதும், தேவனைப் பற்றிய எண்ணத்தை உயர்த்தி அவருக்குத் தகுதியுள்ளதாக மாறுவதுமாகும். அதனுடைய ஜெபங்களிலும் உழைப்பிலும் இதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

ஒரு ஜெபம்

சர்வ வல்ல தேவனே நீர் தத்துவ ஞானிகளுக்கும், மேதைகளுக்கும் தேவனல்ல, ஆனால் தீர்க்கர்களுக்கும் அப்போஸ்தலருக்கும் தேவன். எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் நீர் பழுதற்றவர்.

உம்மை அறிந்தவர்கள், தம்மை தங்கள் யோசனையின்படி ஒரு ஜந்துவாக வணங்கமாட்டார்கள். எனவே எங்கள் மனதை பிரகாசிக்கப் பண்ணி நாங்கள் உம்மை உண்மையான தேவனாக ஆராதிக்கவும், பூரணமாக நேசிக்கவும், தகுதியான அளவு ஆராதிக்கவும் கிருபை தாரும்.

எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டுகிறோம். ஆமென்.

ஆண்டவர் நமது நம்பிக்கை

The Lord is Our hope

Rich Carmicheal

சங்கீதம் 71 -லிருந்து சில சத்தியங்களைக் கூறி சோதனைகளிலும் பாடுகளிலுமிருக்கிற வாசகர்களை தைரியப்படுத்த விரும்புகிறேன். இந்த சங்கீத ஆக்கியோனும் ஒரு கொடிய சூழலில் வைக்கப்பட்டிருந்தார். அவருடைய அழிவைத் தேடிய சத்துருக்களிருந்தனர் (வச.4,10,11,13). வயோதிபத்தால் அவருடைய பெலனும் குன்றி விட்டது (வ.9). அவர் அனுபவித்த தொல்லைகளால் தாம் பூமியின் ஆழங்களிலிருப்பதாக அவர் உணர்ந்தார் (வ.20). இந்த நிலையிலிருந்து விடுவிக்கப்பட உதவி தேவையாயிருந்தது (வச.2-4,12). ஆண்டவருடைய ஆறுதல் அவருக்குத் தேவையாயிருந்தது (வ.21).

இவைகளின் மத்தியிலும் அவர் நம்பிக்கையிழந்து போகாமல் நம்பிக்கையால் நிரப்பப்பட்டார். "நானோ எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்து, மென்மேலும் உம்மைத் துதிப்பேன்" (71:14) ஏன்? அவரது கண்கள் கர்த்தரையே நோக்கிக் கொண்டிருந்தன. அவரது நம்பிக்கை அவர் மேலேயே வைக்கப்பட்டிருந்தது. நம்பிக்கையை ஆண்டவர் மீது வைத்தது மட்டுமல்ல ஆண்டவரே அவரது நம்பிக்கையாயிருந்தார். "கர்த்தராகிய ஆண்டவரே. . . . நீரே என் நம்பிக்கை" வச.5.

நமது சூழல்கள் எப்படியிருந்தாலும் சங்கீதக்காரனைப் போல கர்த்தருக்கு நேராகத் திரும்பினால் நமக்கு நம்பிக்கையுண்டு

ஆண்டவர் பலத்த அடைக்கலம்

"கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன்", "நீரே என் கன்மலையும், என் கோட்டையுமாய் இருக்கிறீர்", "நீரோ எனக்கு பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்" (வச.1:3,7).

வாழ்வின் புயல்களின் மத்தியில் நாம் சென்று அடைக்கலம் பெறக்கூடிய ஒருவர் இருக்கிறார். அவர் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணை நாகூம் 1:7. அவர் பாதுகாவலின் இடம் நீதி.18:10. "தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடயமாயிருக்கிறார்" சங்.18:30, நம்மை மூடி பாதுகாக்கிறவர் சங்.91:4. சங்.46:1-3 வாசிக்க.

ஆண்டவரை நாம் எப்போதும் அழைக்கலாம்

"நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்" (வச.3)

சங்கீதக்காரனுக்கு எப்பொழுதும் வந்தடையத்தக்கதாயிருந்த அவர் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் அப்படியே இருக்கிறார். நாம் எபி.4:16-ன் படி ". . . . நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டை யிலே சேரக்கடவோம்". அவர் நம்மை ஒருபோதும் தனியாக விடார். நம்மைத் தமது பிரசன்னத்திற்கு வர வேற்று அவரது ஐக்கியத்தைப் பெறவும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெறவும் அழைக்கிறார். அவரைக் கிட்டிச் சேரும் போது அவரும் நம்மிடம் நெருங்கி வருவார் யாக்.4:8. அவரது பிரசன்னமும், சமாதானமும், அவரது ஐசுவரியமும் நமக்குப் போதுமான வைகள் (பிலி.4:5-7 வாசிக்க).

ஆண்டவர் உங்களை நிலைநிறுத்த உத்தமர்

"நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்; என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே" சங்.71:6. "முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளி விடாமலும், என் பெலன் ஒடுங்கும் போது என்னைக் கைவிடாமலும் இரும்" (வச.9).

நீங்கள் தேவனுடைய கையின் கிரியைகள், அவர் உங்களை நன்கு அறிவார். அவர் உங்களுக்காக அதிக மாகக் கவலைப்படுகிறார் சங்.139:1-16. நீங்கள் பாவம் செய்திருந்தாலும், அவருக்கு உண்மையற்றவர்களாயிருந் தாலும் அவர் உங்கள் வாழ்வில் உண்மை யுள்ளவராகவே இருந்திருக்கிறார். "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள், உமது உண்மை பெரிதா யிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரி டத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன்" புல.3:22-24. ". . . .நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடு வதுமில்லை என்று அவர் சொல்லியிருக் கிறாரே. . . .கர்த்தர் எனக்கு சகாயர்; நான் பயப்படேன்" எபி.13:5,6. நம்மை யும் நமது சூழல்களையும் அவரிடம் ஒப்படைத்து விட்டால் நமது மேடு பள்ளங்களிலெல்லாம் அவர் நம்மோடி ருப்பார். இவ்வளவு தூரம் நம்மைக் கொண்டு வந்தவர் இனிமேல் விட்டு விட மாட்டார்.

அவர் நம்மை பலப்படுத்த வல்லவர்

"இப்பொழுதும் தேவனே, இந்த சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும், உமது பராக் கிரமத்தையும் நான் அறிவிக்கு மளவும், முதிர் வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக" வச. 18. நமது பெலன் குன்றக் கூடியது. ஆனால் தேவனுடைய பெலன் அளவற் றதும் முடிவில்லாதது மாகும். சங்.96:6-ல் "வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது" என படிக் கிறோம். "நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமா யிருக்கிறார்" சங்.147:5. அவருடைய பெலத்தால் அவர் நட்சத்திரங்களையும் நிலை நிறுத்துகிறார். சோர்ந்து போகிற வனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தை பெருகப் பண்ணுகிறார் ஏசா.40:29. அவருக்கு காத்திருக்கிறவர்களுக்கு அவர் புதுபெலனை அளிக்கிறவர் ஏசா. 40:31. அவரே நமது பெலன். "கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக் கிறார்" சங்.28:7. "என் மாம்சமும் என் இருதயமும் மாண்டு போகிறது. தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்" சங்.73:26. "நம்மைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய நமக்கு பெலனுண்டு" பிலி.4:13. அவர் நம்மை பெலப்படுத்தும்போது அவரது பெலன் நம்மிலும் நம்மூலமாக வும் கிரியை செய்வதால் அவரது கிருபைக் கும், மகிமைக்கும் அது சாட்சியாயிருக் கும் 1பேதுரு4:11.

நமது துன்பங்கள் மூலமாக ஆண்டவர் நன்மை செய்கிறார்

"தேவனே உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர், தேவனே உமக்கு நிகரானவர் யார்? அனேக இக்கட்டுகளையும், ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னை பூமியின் பாதாளங் களிலிருந்து ஏறப்பண்ணுவீர்" சங்.71:19-20.

நமது தேவன் அதிசயமானவர். சூழ்நிலைகளை மாற்றக்கூடிய வல்லமை அவரிடமுண்டு. "துயரப்பட்டவர்களை சீர்படுத்தவும்,அவர்களுக்குச் சாம்பலுக் குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத் துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்" ஏசா.61:3. சத்துரு தீமைக் கேதுவாக நடப்பிக்கிறவைகளை அவர் தமது திட்டங்களுக்காக பயன்படுத்து வார் ஆதி.50:20. நமது சோதனைகளி லும், வேதனைகளிலும் அவரை நோக்கிப் பார்த்தால் அவற்றைத் தமது மகிமைக் கும் கனத்துக்கும் ஏதுவாக மாற்றுவார். "அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனி டத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிற தென்று அறிந்திருக்கிறோம்" ரோமர் 8:28. நாம் அவரை முழுமனதோடு நம்பி னால் நமது பாதைகளை அவர் நேராக்கு வார் நீதி.3:5-6. "கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமுள்ளவரா யிருக்கிறாரே" யாக்.5:11.

ஆண்டவர் விடுவிக்கவும் தப்புவிக்கவும் உதவி செய்யவும் கூடியவர்

"உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும், உமது செவியை எனக்குச் சாய்த்து என்னை இரட்சியும்" ". . . .என் தேவனே எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்" சங்.71:2,12.

நமது ஆண்டவர் நம்மை நமது சத்துருக்களிலிருந்து விடுவிக்கிறவர் சங்.18:17. நமது பாவங்களிலிருந்தும் விடுவிப்பார் சங்.34:4. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அனேகமாயிருக்கும் அவற்றினின்றும் விடுவிப்பார் சங்.34: 17,19. சங்.107-ல் நாம் அவரை நோக்கிக் கூப்பிடும்போது எப்படிப்பட்ட கடின நம்பிக்கையற்ற சூழலிலும் அவற்றிலி ருந்து அவர் விடுவிப்பார் என படிக் கிறோம். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எல்லா ஒத்தாசைகளும் நமக்கு வரும் சங்.121:2, எரே.32:17.

ஆண்டவர் நம்மைத் தேற்றுகிறவர்

"என் மேன்மையைப் பெருகப் பண்ணி, என்னை மறுபடியும், தேற்று வீர்" சங்.71:21.

நாம் துவண்டு போகும்போது தேவன் அதை நன்கு தெரிந்து கொண்டு ஆழ்ந்த தேறுதலைத் தருகிறார். அவர் ". . .இரக்கங்களின் பிதாவும், சகல வித மான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறார் . . . .எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலி னாலே. . ." 2கொரி1:3-4.

சூழ்நிலை எதிராக மாறினாலும் தொல்லைகள் எங்கும் சூழ்ந்தாலும் நமது தேவன் நம்மைத் தேற்றுகிறவர் 2கொரி.7:6.

அன்பானவர்களே, உங்களை அழுத்துகிற சூழல்களை ஆண்டவரிடம் கொண்டு வாருங்கள். அவர் உங்களைப் பராமரிக்க உத்தமர். அப்படி அவர் செய்வதால் உங்கள் வாழ்வு பெரிய சாட்சியாக எழும்பும். "நானோ எப் பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்து, மென்மேலும் உம்மைத் துதிப்பேன்" சங்.71:14.

கிறிஸ்துவுக்கு மட்டுமே பயபக்தி காண்பிப்போம்

Devoted not to a cause but for God
Oswald Chambers

இயேசுகிறிஸ்துவோடுள்ள மிக நெருங்கிய உறவு உடனடி கீழ்ப்படி தலால் வெளிப்படும். சீஷத்துவம் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வுக்கு தனிப்பட்ட மிகுந்த பாசத்தைக் காண்பிப்பதாகும். ஒரு நபருக்கு பய பக்தி காண்பிப்பதற்கும், ஒரு கொள் கைக்கு பயபக்தி காண்பிப்பதற்கும் வேறுபாடு உண்டு.

தம்மைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்கிற அனேகர் கிறிஸ்து விடம் பயபக்தியுடையவர்களல்ல. இயேசுவை இதய பூர்வமாக நேசிக்கும் அன்பை அளிப்பது தூய ஆவியானவர். தூய ஆவியானவர் தேவ அன்பை நமது உள்ளங்களில் ஊற்றுகிறார். இயேசுவை மகிமைப்படுத்தும் ஒரு வாய்ப்பு கிடைக் கும் போதெல்லாம் அவர் நமது இருதயம், நரம்புகள், முழுமையான நபரத்துவம் ஆகியவற்றைத் தமது ஆளுகைக்குட் படுத்தி, இயேசுவின் மேலுள்ள பய பக்தியால் கொழுந்து விடச் செய்வார்.

தேவனோடுள்ள அனுதின உறவு

Daily fellowship with God

Andrew Murray

"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது". *1யோ.1:3.*

தேவனோடுள்ள ஐக்கியம் கிறிஸ்தவ வாழ்வுக்கு மிக முக்கிய தேவையாகும். நம்மிலுள்ள தெய்வீக வாழ்வு தேவனிடத்திலிருந்து வருவதோடு முற்றிலும் அவரைச் சார்ந்திருக்கிறது. ஒவ்வொரு வினாடியும் புதிதாகக் காற்றை நாம் சுவாசிப்பது போலவும், சூரியன் புதிதாக ஒவ்வொரு வினாடியும் அதன் ஒளியை கீழே அனுப்புவது போலவும் நேரடியாக நாம் தேவனோடு உறவு கொண்டிருந்தால் மட்டுமே நமது ஆத்துமா உறுதியாயிருக்க முடியும்.

ஒரு நாள் அனுப்பப்பட்ட மன்னா அடுத்த நாள் கெட்டுப் போய் விடும். நாம் புதிய கிருபையை ஒவ்வொரு நாளும் பரத்திலிருந்து பெற வேண்டும். அதற்காக அனுதினமும் தேவனோடு நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளையும் தேவனுக்கு முன்பாகக் காத்திருந்து அவருடைய தொடுதலைப் பெற்று ஆரம்பிக்க வேண்டும்.

தேவனுக்கு முன்பாக அமைதியாகப் பணிய வேண்டும்

இந்த நிலையில் முதலாவது உங்கள் பயபக்தியின் செயலாக தேவனுக்கு முன்பாக உங்களை ஒப்படைக்க வேண்டும். ஜெபமானாலும், ஆராதனையானாலும், தேவனுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். அமைதியாக தாழ்மையுள்ள விசுவாசத்துடன் குனிந்து அவரை மகிமைப்படுத்த வேண்டும். தேவன் அருகிலிருக்கிறார். தேவன் அன்பாயிருக்கிறார். அவர் நம்மோடு உறவு கொள்ள ஆவலுடனிருக்கிறார். அவர் சர்வ வல்லவர். அவர் எல்லாரிலும் கிரியை செய்கிறவர், நம்மிலும் கிரியை செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார், அவரை நமக்கு வெளிப்படுத்த விரும்புகிறார்.

நீங்கள் தேவனுக்கு கனத்திற்கும், மகிமைக்கும், வல்லமைக்குமுரிய இடத்தை அளித்து, உங்களைத் தாழ்த்தி, தாழ்மையின் ஆவியால் நிரப்பப்படும்படி நாடுங்கள். சிருஷ்டியாகிய உங்களில் தேவனே எல்லாமாக இருக்கும்படி உங்களை வெறுமையாக்குவது ஆசீர்வாதமானது. பாவிகளாகிய நாம் அவரை நோக்கிப் பார்க்கத் தகுதியற்றவர்கள். எனவே நம் தாழ்ந்த நிலையை உணர்ந்தவர்களாக அவருக்கு முன்பாகப் பணிந்து குனிந்து வணங்குவோம். தேவனுடைய அன்பு உங்களை ஆட்கொண்டு இன்னும் உங்களைத் தாழ்மைக்குக் கொண்டு வரட்டும். தாழ்மை, சாந்தம், பொறுமை, ஆகியவற்றோடு அவருடைய நற்குணத்திற்கும் கிருபைக்கும் உங்களை அர்ப்பணியுங்கள். அவர் உங்களை மேன்மைப்படுத்துவார்.

கிறிஸ்துவில் உங்கள் இடத்தை எடுத்துக் கொள்ளுங்கள்

பின்பு கிறிஸ்துவில் உங்கள் இடத்தை ஏற்றுக் கொண்டு அதனை கனப்படுத்துங்கள். தேவன் தமது நேச குமாரனில் பிரியப்படுகிறார். அவரைக் கிட்டிச் சேருகிறவர்களால் அவர் திருப்தியடைகிறார். தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்தில் பரிசுத்த இரத்தத்தின் தைரியத்தில் ஆழமாகச் செல்லுங்கள். கிறிஸ்துவில் நீங்கள் மிகவும் பிரியமானவர்கள் என்ற நம்பிக்கையுடன் செல்லுங்கள். கிறிஸ்துவுக்குள் நீங்கள் திரைக்குள் பிரவேசித்து விட்டீர்கள். பிதாவின் இருதயத்தை எட்டி அவருடைய அன்புக்குப் பாத்திரவான்களாகிவிட்டீர்கள். நாம் தேவனுக்கு அதிகமான இடத்தை நம் வாழ்வில் அளிப்பதால் தேவன் நம்மில் கிறிஸ்து உருவாவதைக் காண முடியும்.

கிறிஸ்து வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர் தனிப்பட்ட முறையில் நம்மை நேசித்து ஒவ்வொரு நாளும் தனிப்பட்ட முறையில் அந்த அன்பிற்கு ஈடுசெய்ய எதிர்பார்க்கிறார். அவர் தம்மை நமக்கு தனிப்பட்ட இரட்சகராகவும் பாவத்திலிருந்தும் அதன் வல்லமையிலிருந்தும் பாதுகாக்கிறவராகவுமிருக்கிறார். "அவரோடு நெருங்கியிருந்தால் பாவம் செய்யாமலிருப்பேனா?" என்று கேட்காமல் "அவர் என்னை தமக்கருகில் வைத்துக் கொண்டால் நான் பாவம் செய்ய முடியுமா?" என்று கேளுங்கள். உடனே அவரை நம்புவது எவ்வளவு பாதுகாவலானது என்று அறிந்து கொள்வீர்கள்.

கிறிஸ்துவின் வாழ்வு நம்மில் வல்லமையாக மட்டுமல்ல அவரது சமூகம் ஒரு நபராகவும் இருப்பதோடு அவரது சாயல் நம்மில் உருவாக்கப்படுகிறது. அவர் நம்மில் உருவாக்கப்படுவதால் அவரது சாயல் நம்மில் காணப்படும். அவரது மகத்துவமும் ஆசீர்வாதமுமான பணி உங்களில் அவர் மூலமாய் செய்யப்படும் உணர்வு ஏற்படும் வரை அவர் முன்பாகப் பணியுங்கள். "பிதாவே இதோ இருக்கிறேன். கிறிஸ்துவின் சாயலை நான் ஏற்றுக் கொள்ளக் கூடிய வரை அவரது சாயலை என்னில் தாரும்" என்று ஜெபிப்போம். "எனது பிள்ளையே உனது இருதயம் கிறிஸ்துவின் சாயலை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு இருதயம் திறந்திருக்கு மட்டும் அதனைத் தருகிறேன்" என்று அவர் சொல்லும் வரை காத்திருப்போம். இயேசுவை மாம்சத்தில் பூரணமாக வெளிப்படுத்தின தேவன் உங்களிலும் அவரை வெளிப்படுத்தி அவரில் உங்களைப் பூரணப்படுத்துவார். பிதா குமாரனை வெளிப்படுத்துகிறார். அவரது சாயலை நம்மில் உருவாக்க மகிழ்ச்சியுடையவர். இந்தப் பணி நடைபெற நீங்கள் தேவனுக்காகக் காத்திருந்து, அவரோடுள்ள உறவில் நிலைத்திருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் சாயல் இரு முக்கிய காரியங்களிலிருக்க வேண்டும். அவருடைய மரணத்தின் சாயல் மற்றும் அவரது உயிர்த்தெழுதலின் சாயல் *(ரோ.6:5)* என்பவைகளாகும். கிறிஸ்துவின் மரணம் அவரது தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல், முற்றிலுமாக தன் வாழ்வை தேவனுக்கு ஒப்புக் கொடுத்தல் ஆகிய வற்றின் மூலம் அவரது மரணத்தின் வல்லமை நம்மில் கிரியை செய்கிறது. நாம் அதற்குத் தகுதியுள்ளவர்களாகி அவரை அவரது உயிர்த்தெழுதலின் வலிமை, பாவத்தின் மேல் வெற்றி மற்றும் உயிர்த்தெழுந்த வாழ்வின் சந்தோஷம் ஆகியவற்றை அறிந்து கொள்வோம். எனவே ஒவ்வொரு காலையிலும், ". . . .உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். . . ." *ரோ.6:13.* அவர் நமக்குத் தந்த ஜீவனை காத்துக் கொண்டு உயிர்த்தெழுதலின் வல்லமையோடு வாழ கிருபையும் தருவார்.

தூய ஆவியின் வல்லமையால்

நம்மில் வாசம் பண்ணுகிற தூய ஆவியால் மட்டுமே இவைகள் ஆகும். உங்களிலுள்ள கிறிஸ்துவை மகிமைப்படுத்த அவரை சார்ந்து கொள்ளுங்கள். அவரது ஆவி உங்களில் அதிகமாய்ப் பாய்ந்து கொண்டேயிருக்க கிறிஸ்துவை சார்ந்து கொள்ளுங்கள். தேவனுக்கு முன்பாக அவரது பிரசன்னத்தை உணரக் காத்திருக்கும் போது ஆவியானவர் உங்களிலிருந்து தேவ காரியங்களை வெளிப்படுத்துகிறார் என்று நினைவு கூருங்கள். கிறிஸ்துவின் ஆவி உங்களை அபிஷேகிக்கும்படி தேவசமுகத்தை நாடுங்கள். அப்படியானால் உங்கள் முழு வாழ்வும் எப்போதுமே ஆவிக்குரியதாக அமையும்.

அவரது ஆச்சரியமான இரட்சிப்பை சிந்தித்து மகாப் பெரியவரும் பரிசுத்தருமான தேவனுடைய முழுமையான உறவை நாடி, கிறிஸ்துவை அவர் உங்களில் வெளிப்படுத்தும்படி காத்திருந்தால் அவரைப் பெற்றுக் கொள்ள, எல்லாவற்றையும் விட்டு விடுவது எவ்வளவு அவசியம் என்பதை உணர முடியும். தேவனுக்காக முழுமையாகக் கிறிஸ்துவைப் போல வாழ்வது என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ள கிருபையை நாடுங்கள். தூய ஆவியானவர் மட்டுமே தேவனுக்காக நம்மை முழுமையாக அர்ப்பணிப்பது என்றால் என்ன என்பதை நமக்குப் போதிக்க முடியும். இந்த விஷயத்தில் உங்களுக்கு என்ன தெரியாது என்பதை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தக் காத்திருங்கள். தேவனை அண்டிச் சேருவதற்கான எந்த முயற்சியும் அவரோடுள்ள உறவுக்கான எந்த வேண்டுதலும் புதிய, திட்டமான மற்றும் முழுமையான அர்ப்பணிப்பும் உங்களில் செயல்பட நிறைவேற்றப்பட வேண்டும்.

விசுவாசிக்கால்

வேத வசனம் முழுவதும், ஆவிக்குரிய வாழ்வின் அனைத்து பகுதிகளி

லும் திறவுகோல் குறிப்பாயிருப்பது விசுவாசம். நீங்கள் தேவனுக்கு முன்பாகக் காத்திருக்கும் போது அவரில் ஆழமானதும் அமைதியானதுமான விசுவாசத்துடனிருக்க வேண்டும். அவர் அதரிசனமாக நம் அருகில் இருப்பவர். அவர் பரிசுத்தமும் சத்துவம் நிறைந்தவர், மிகுந்த அன்பும் விசுவாசமுமுடையவர். எனவே பரலோக ஜீவன் நம்மைச் சுற்றிலும் நம்மிலுமுண்டு. தேவனுடைய அனைத்துத் திட்டங்களும் பரிசுத்த ஆவியால் செயல்படுத்தப்பட உங்களை முற்றிலும் அவருக்கு அர்ப்பணித்து விடுங்கள். ஒவ்வொரு நாளையும் தேவனோடுள்ள ஐக்கியத்துடன் ஆரம்பித்தால் தேவன் உங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருப்பார். ". . . .ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும், எல்லாவற்றிற்காகவும், பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" எபே.5:18-20.

கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசித்த ஜார்ஜ் உவைட் ஃபீல்டு பகுதி –1

George White field: A burning zeal for Christ - Part - 1

"திறந்தவெளிப் பிரசங்கிமாரின் இளவரசன்" என்று புகழ் பெற்ற ஜார்ஜ் உவைட் ஃபீல்டு ஆத்தும ஆதாயப் பணியில் ஒப்புயர்வற்றவர். அவரது வலிமை மிக்கக் குரல் திறந்த வெளியில் பிரசங்கிப்பதற்கு தேவன் அளித்த ஈவு என்று கூறலாம். அவரைப் போல் மிக அதிக எண்ணிக்கையுள்ள கூடுகைகளில் பிரசங்கித்தது எவருமில்லை. சபைகளின் கதவுகள் அவருக்கு எதிராகப் பூட்டப்பட்டிருந்த அந்தக் காலக் கட்டத்தில் மெலிந்த உடலும் பலவீனமான நுரையீரல்களும் கொண்ட அவருக்கு தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட பெலனை அளித்து அவரை பயன்படுத்தினார். பெஞ்சமின் பிராங்க்ளின் என்ற பத்தன் அவரது குரலைக் குறித்து, அது எவ்வளவு தூரம் கேட்கக் கூடியது எனப் பரிசோதித்து விட்டு, "ஒருமைலுக்கு அப்பால் கூட அதனைத் தெளிவாகக் கேட்கலாம்" என்று கூறியிருக்கிறார்.

உவைட் ஃபீல்டின் தாத்தா, இங்கிலாந்து சபையில் ஒரு போதகராயிருந்தார். ஆனால் அவரது தந்தை ஓயின் வியாபாரியும் ஒரு சத்திரக் காப்பாளருமாயிருந்தார். உவைட் ஃபீல்டு இங்கிலாந்திலுள்ள கிளௌசெஸ்டர்ஷையர் என்ற இடத்தில் 1714-ம் ஆண்டு பிறந்தார். ஆறு ஆண் பிள்ளைகளும் ஒரே ஒரு பெண் பிள்ளையும் அடங்கிய அக்குடும்பத்தில் இவர் ஏழாவதாகப் பிறந்தார். இவர் இரண்டு வயதாயிருக்கும் போதே தந்தை மரணமடைந்து விட்டார். அவர் செய்த பணியைத் தாயார் தொடர்ந்த தோடு குடும்ப பாரத்தையும் பொறுப் புடன் கவனித்தார். நான்கு வயதில் இவருக்கு ஏற்பட்ட அம்மை நோய் சரியான பராமரிப்பு இல்லாமையால் அவரது இடது கண்ணை கூச்சப்பார்வையுடையதாக மாற்றியது.

இவரது ஆரம்ப வாழ்வு பொய், ஏமாற்றுதல், கெட்ட வார்த்தைகள் பேசுதல், சிறிய களவுகள் போன்ற வற்றால் கறைபட்டது. மிருகத்தன்மையும், முரட்டுக் குணமுமுடையவராய் கட்டுப்பாடற்று அவர் வாழ்ந்தார். 'எனது பாவங்கள் எண்ணற்றவை' என்று தனது கடந்த காலத்தைக் குறித்து அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்ப கல்வியினை அவர் St.மேரி டி கிரிப்ட் என்ற பள்ளியில் பயின்றார். அவருக்கு அபார ஞாபக சக்தியும் நாவன்மையுமிருந்தன. எனவே அவர் மேடைகளில் பேசி பெயர் பெறுவதில் விருப்பம் கொண்டார். தனது 15-வது வயதில் பொதுவான பள்ளிப் படிப்பை விட்டுவிட்டுத் தனது தாயாருக்கு உதவி செய்ய ஆரம்பித்தார். மாலை வேளைகளில் வேதத்தை வாசித்து சில பிரசங்கங்களையும் தயாரித்தார்.

இறுதியாக சத்திரத்தின் பொறுப்பை ஒரு சகோதரன் எடுத்துக் கொள்ள, பிரிஸ்டனிலுள்ள இன்னொரு சகோதரனிடம் சென்றார். இங்கு தங்கியிருக்கும் போது முதல் முறையாக தேவ ஆவியானவரின் வல்லமை தமது இருதயத்தில் கிரியை செய்வதை உணர்ந்தார். தேவ காரியங்களுக்கான அதிக வாஞ்சை அவரில் தோன்றியது. இரு மாதங்களுக்குப் பின் சொந்த வீடு திரும்பினார். இப்போது அவரில் காணப்பட்ட பாவ உணர்வும் வாஞ்சைகளும் அகன்று விட்டன. அவரது தாயார் இயன்ற அளவு அவரை அன்புடன் நடத்தினார்கள். ஒரு பணியும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஒரு நாள் தனது சகோதரியிடம், "தேவன் நாம் அறியாத ஏதோ ஒன்றை எனக்காக எதிர்பார்க்கிறார்" என்றார்.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம்

சில காலங்களுக்கு அப்பால் அவர் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் வழியாகப் பணி புரியும் ஒரு வாய்ப்பு இருப்பதைக் கண்டார். மறுபடியும் பள்ளிக்குச் சென்று ஆக்ஸ்ஃபோர்டில் சேருவதற்கான ஆயத்தங்களைச் செய்தார். இப்போது தீய நண்பர்களால் நாஸ்திகத்திற்கு நேராகத் திருப்பப் பட்டார். ஆனால் இது நீடிக்கவில்லை. தமது 17-வது வயதில் பரிசுத்த பந்தியில் சேரத் தீர்மானம் செய்தார். தேவனைப் பற்றிய ஒரு சொப்பனமும், அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்ற அழுத்தத்தை ஏற்படுத்தியது. அவரது சகோதரர்களில் ஒருவரும் அவரிடம் நேரடியாக அவரது மாற்றங்களைக் குறித்துப் பேசினார்.

1732-ம் ஆண்டில் தமது 18-ம் வயதில் ஆக்ஸ்ஃபோர்டு சென்றார். மிகவும் பக்தியுள்ள வாலிபர்களின் ஒரு குழுவில் இணைந்து தேவனை உற்சாகமாக சேவிக்க ஆரம்பித்தார். அந்தக் குழுவில் சுமார் 15பேர் அடங்கியிருந்தனர். அவர்களில் ஜான் வெஸ்லியும், சார்லஸ் வெஸ்லியுமுண்டு. சார்லஸ் வெஸ்லி, 'மனிதரது ஆன்மாவில் தேவனது ஜீவன்' என்ற ஒரு நூலை இவருக்கு அளித்தார். அப்புத்தகம், வெளிப்புற வாழ்க்கை, கிரியைகள் போன்றவற்றாலும், சடங்குகளாலும் மனித ஆத்துமா இரட்சிப்படைய முடியாது என்பதை அவர் அறிந்து கொள்ள அவரை வழி நடத்தியது. உண்மையான மார்க்கம் என்பது 'ஆத்துமா தேவனுடன் நல்லுறவுடன் இருப்பது, அல்லது கிறிஸ்து நம்மில் உருவாவது' என்பதை அவர் வாசித்தபோது ஒரு ஒளிக்கதிர் அவரது ஆத்துமாவை ஊடுருவிச் சென்றது. தான் ஒரு புது சிருஷ்டியாக வேண்டும், மறுபடியும் பிறந்தால் மட்டுமே கிறிஸ்தவன் என அழைக்கப்பட முடியும் என்று அறிந்து கொண்டார்.

மறுபடியும் பிறந்த அனுபவத்தோடு அவர் மிக மகிழ்ச்சியுடன் வேத வசனத்தை வாசிக்கவும், சுகவீனரை சந்திக்கவும், ஜெபிக்கவும், தேவனுக்கென்று பல கடமைகளைச் செய்யவும் ஆரம்பித்தார். அவரது நண்பர்கள் அவரை அபிஷேகம் பெறும்படி வற்புறுத்தினர். அவரோ தமது தாழ்மையினால் அதனை மறுத்து விட்டார். ஆயினும் பொறுமையும், விட்டுக் கொடுக்கும் தன்மையும் உடைய அவர் பின்பு போதகாபிஷேகத்திற்கு ஒப்புக் கொண்டார்.

போதகாபிஷேகம்

கிளௌசெஸ்டரில் அத்தியட்சராயிருந்த Dr.பென்சன் இவரை அழைத்து அன்போடு ஏற்றுக் கொண்டார். தான் 23 வயதிற்கு உட்பட்டோரை அபிஷேகம் செய்வதில்லை எனத் தீர்மானித்திருந்த போதும் உவைட்ஃபீல்டு ஆயத்தமாயிருந்தால் அவரை அபிஷேகம் செய்வதாக கூறினார்.

அவர் போதகாபிஷேகம் செய்யப்பட்ட வேளை தன்னை முற்றிலும் தேவனுக்காக அர்ப்பணித்தார். தேவ ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்று வல்லமையால் நிரம்பி தேவனுடைய அறுவடைக் களத்தில் சிறந்த பணியாளராக மாற்றப்பட்டார். 1976-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் நாள் தனது இருபத்தோராம் வயதில் கிளௌசெஸ்டர் சிற்றாலயத்தில் Dr.பென்ஸன் அவர்களால் போதகாபிஷேகம் பெற்றார். அந்த அனுபவத்தைப் பின்பு அவர் தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்:

"ஞாயிறு காலை நான் மிக விரைவாக எழுந்து அப்.பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தை வாசித்து ஜெபித்தேன். குறிப்பாக 'உன் இளமையைக் குறித்து ஒருவரும் உன்னை அசட்டை பண்ணாதபடி' 1தீமோ.4:12 என்ற வசனத்தை அடிப்படையாகக்

கொண்டு ஜெபித்தேன். நான் பீடத்தில் நின்றபோது சின்ன சாமுவேல் சணல் நூல் ஏபோத்தைத் தரித்தவனாக கர்த்தருக்கு முன்பாக நின்ற எண்ணம் என்னில் தோன்றியது. அத்தியட்சர் என் தலைமீது தமது கரத்தை வைத்தபோது எனது இருதயம் உருகியது. எனது சரீரம், ஆத்துமா, ஆவி யாவற்றையும் பரிசுத்த தேவனுடைய ஆலய பணிவிடைக்காக முழுமையாக அர்ப்பணித்து விட்டேன். அத்தியட்சரின் கட்டளைப்படி சுவி சேஷத்தை வல்லமையாகப் படிக்கிறேன். அனேகருக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணும்படி அதை முத்தரித்திருக்கிறேன். இதற்காக கர்த்தராகிய இயேசுவின் இரத்தமும் சரீரமுமாகிய பரிசுத்த சாக்கிரமந்தை அனைவரோடும் பகிர்ந்து கொள்கிறேன்".

தேவன் உண்மையாகவே அவரது உதடுகளைத் தெய்வீக அக்கினியாகிய தூய ஆவியால் அவரது அபிஷேக வேளையில் தொட்டார். எனவே அடுத்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து அவர் அதிக அபிஷேகத்தோடும் வல்லமையோடும் பிரசங்கிக்க ஆரம்பித்தார். அவரது முதல் பிரசங்கம் அதிக மக்கள் கூட்டத்தில் St.மேரி டி கிறிப்ட் என்ற பழைய கஸ்பா ஆலயத்தில் ஏறெடுக்கப்பட்டது. இப்பிரசங்கத்தால் 15பேர் பயித்தியமாகிவிட்டதாகப் பின்பு அத்தியட்சருக்குப் பராது அனுப்பப்பட்டது. ஆனால் அந்த நல்ல அத்தியட்சர், இந்நிலை அடுத்த வாரத்திலும் ஏற்பட அவர் எதிர்பார்ப்பதாகப் பதிலளித்தார்.

தொடரும்

இது ஒரு எளிய நிவாரணம். ஆனால் இது பலன் தருகிறது. நாம் அவரில் நிலைத்திருக்கும் போது நாம் பாவத்தின் மேலும், சுயத்தின் மேலும் வெற்றி பெறுவதோடு கனி தருகிறவர்களுமாயிருப்போம் யோவா.15:5. இயேசுவோடு பேசுங்கள். அவர் இன்றும் மகாப் பெரிய இரட்சகரும், மிகப் பெரிய சுகமளிப்பவருமாயிருக்கிறார். அவர் நொறுங்குண்ட இருதயத்தைக் குணமாக்குகிறவர் லூக்.4:18. உடைந்த சரீரங்களையும் குணமாக்குகிறவர் மத்.8:16-17. அவரால் கூடாதது ஒன்று மில்லை மத்.19:26.

அனுதினமும் ஆண்டவரோடு நடப்பதால் நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் 1யோ.1:9.

தேவனுடைய வார்த்தை சொல்லுவதே அதன் பொருள்

இயேசுவோடு அனுதினமும் தாழ்மையுடன் இந்த வாழ்வின் பரதேச பிரயாணத்தில் நடப்போம். அவர் நமது பரலோக மணவாளன். அவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டே காலத்தையும் பயன்படுத்துவோம் லூக்.19:13. (வியாபாரம் செய்வோம்) அவரது மகிமையான பணியை நிறைவேற்றுவோம். அவரது கிருபை நமக்குப் போதுமானது. 2கொரி.12:9. அவர் தமது கிருபை, ஆதரவு, உதவி ஆகியவற்றை தாழ்மையுள்ளவர்களுக்கு அளிக்கிறார்.

அவர் என் ஆத்துமாவை திருப்திபடுத்துகிறார்.
அவர் வெற்றிடத்தை நிரப்புகிறார்,
அவரது அன்பு கட்டுப்பாட்டிலுள்ளது.
அவரது முகத்தால் நான் கவரப்பட்டேன்.
அவர் வானத்திலிருந்தாலும்,
அவரின்றி நான் வாழ்வது எப்படி?
என் ஆண்டவரே என் எல்லாவற்றையுமே
எடுத்துக் கொள்ளும்! எடுத்துக் கொள்ளும்!

மே மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக
இதய கதறல்–2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 20–05–2017
3-வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

இடம் : புது வாழ்வு எல்லாம் இயேசுவுக்கே
திருச்சபை T.R.பட்டினம்,
காரைக்கால்

தொடர்பு : பாஸ்டர் R.தெட்சணாமூர்த்தி,
காரைக்கால்
மொபைல்: 94864 89590

இயேசுவைப் போன்ற உருக்கமான இருதயம்

A tender heart like Jesus

W.C.Moore

தேவபிள்ளைகள் தங்கள் வாழ்வில் ஒரு குறை இருப்பதை அறிக்கையிடுவதுண்டு. இருதயத்தில் விளக்க முடியாத கடினம், ஆத்துமாவில் அவர்களை அறியாமலே புகுந்து விடும் இரக்கமின்மை ஆகியவற்றால் கண்ணீர் வற்றி, தாழ்மை, நீடிய பொறுமை, அன்பு ஆகியவற்றிற்குப் பதிலாக கசப்பு, அல்லது விமர்சிக்கும் ஆவி வெளிப்படுகிறது.

ஆபத்தானது

நாம் ஆபத்து நிறைந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 2தீமோ.3:1-12. உத்தம கிறிஸ்தவர்களாயிருப்பினும், வெதுவெதுப்பான நிலை ஆரம்பித்தவுடன் விழிப்படையாவிட்டால், இக்காலத்தின் ஆவி அவர்களைச் சூழ்ந்து சிக்க வைத்து, திணறச் செய்து, நெறி தவறச் செய்து, வீழ்த்தி விடக் கூடும் லூக்.21:34-36 வாசிக்க.

தேவனுடைய ஒரே பேறான குமாரன் முதற் பேறானவர் என்பதை தீர்க்கதரிசனங்களும், பிற யாவும் அறிவிக்கின்றன கொலோ.1:18. அவரது வார்த்தைகள் பிதாவின் இதயத்திலிருந்து நேரடியாகப் புறப்படும் சுத்த வார்த்தைகள். அவை எச்சரிக்கும் தன்மையுடையவை. அவை கவனிக்கப் படாவிட்டால் முற்றிலும் பொல்லாத ஒரு சமுதாயத்தை எழுப்பும். அதற்கு உதவியோ நம்பிக்கையோ இல்லை. தேவன் இதைவிடக் கூடுதலான நன்மையை நமக்குச் செய்ய முடியாது. தமது ஒரே பேறான குமாரனை நமக்காகத் தந்தார். நாம் அவரை அவமதித்து, உதாசீனம் பண்ணி புறம்பாக்கி அவருடைய வார்த்தைகளையும் உதாசீனம் செய்தால் (யோவா.12:48) நாம் நம்பிக்கையற்றவர்கள்.

இயேசுவின் எச்சரிக்கைகள்

நரகத்தைக் குறித்த இயேசுவின் எச்சரிப்பை மாற்.9:43-44 வசனங்களில் வாசிக்கிறோம். "அங்கே அவர்கள் புழு சாகாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும்". இது மிகவும் பயங்கர மானதும், பயப்படுவதற்கேதுவான வேதவசன எச்சரிப்பு.

பிரசித்தி பெற்றதும், மனிதரைப் பிரியப்படுத்துகிறவர்களுமான பிரசங்கிமாரைக் குறித்து நேரடியாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டு பயங்கரமான எச்சரிப்பு அளிக்கப்படுகிறது. "எல்லா மனுஷரும் உங்களைக் குறித்து புகழ்ச்சியாய்ப் பேசும்போது, உங்களுக்கு ஐயோ, அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" லூக்.6:26.

இரக்கமின்மைக்கு நிவாரணம்

இரக்கமின்மையைப் போக்க நசரேயனாகிய இயேசுவின் ஆணி கடாவிய கரங்கள் தொட வேண்டும். சிறு பிள்ளைக்குரிய எளிய, தாழ்மையான விசுவாசத்துடன் திரும்பி வர வேண்டும். அவரது ஆணிகளால் தழும் புற்ற கரங்கள் உங்கள் இதயத்தின் மீது வைக்கப்பட வேண்டும். அப்போது அவரது ஜீவன், உருக்கம், தாழ்மை, கீழ்ப்படிதல் ஆகியவை மறுபடியும் உங்கள் ஆத்துமாவுக்குள் செல்லும். உங்களிலிருந்து உங்களால் தொடப் படும் அனைவரிலும் பாய்ந்து செல்லும். அப்போது ஒரு இடறுதலின் கல்லாய் பிறர்க்கு இராதபடி ஆசீர்வாதமாகவும் தூண்டுதலாகவும் மாறி விடுவீர்கள்.

ஒரு போதும் மாறாத தெய்வீக வாக்குத்தத்தம் மத்.11:28-30 வசனங்களில் காணப்படுகிறது. "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய், இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்".

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டைய பிள்ளைகள் கருத்தாய் ஜெபிக்க வேண்டும் என்று மிகவும் பட்சமாய் கேட்கிறேன். **உங்களுக்காக அனுதின மும் ஜெபிக்கிறேன்.**

1. **தயவு செய்து இதனை நிரப்பி அனுப்புங்கள்** என்று அச்சிடப்பட்ட ஒரு பாரம் (Form) உங்களில் சிலருக்கு அனுப்பப் பட்டிருக்கும், தொடர்ந்து அனுப்பிக் கொண்டேயிருப்போம்; **தயவு செய்து அதனை நிரப்பி அனுப்புங்கள்** என்று மிகவும் அன்பாய் கேட்கிறேன். அது என்னு டைய தனி ஜெபத்திற்கென்று நானே தயார் செய்தது.

2. நீங்கள் ஒவ்வொரு தடவையும் எங்களை தொடர்பு கொள்ளும் போதும் **கட்டாயம்** உங்கள் தொலைபேசி அல்லது மொபைல் நம்பரை, உங்கள் கூடிதம் அல்லது காணிக்கையுடன் எழுத மறவாதேயுங்கள்.

3. வங்கி பரிமாற்றம் மூலம் காணிக்கை அனுப்புவோர், சிரமம் பாராது, மறவாமல், **உடனே** தயவு செய்து தொலைபேசி வழி அல்லது SMS மூலம் தகவல் தாருங்கள். Net Banking மூலம் அனுப்பப்படுகிற காணிக்கைகளில் உங்கள் பெயரின் பாதி பகுதிதான் அச்சு (Print) ஆகிறது. ஆகையால் சில வேளை களில் நீங்கள் யார் என்பது அலுவல கத்தில் பணியாற்றுவோருக்கு தெரியா மல், பெயர் தெரியாதோர் பட்டியலில் (Unknown) சேர்க்கப்பட்டு, அதற்கான ரெசீதுகள் அச்சிடப்பட்டு, அலுவலகத் தில் பாதுகாக்கப்படுகிறது. இந்த காரி யத்தில் உங்கள் உடனடி ஒத்துழைப்பை நாங்கள் அதிகமாய் எதிர்பார்க்கிறோம்.

மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார் சங்.103:12.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
WESLEY DEVADASON

அலுவலக போன் : 04652 403295
அலுவலக மொபைல் : 95432 21008
: 94897 40295
10.00 - 1.00; 2.00 - 6.00

ஆண்டவரே ஸ்காட்லாந்தை எனக்கு தாரும், இல்லாவிடில் நான் மரிக்கட்டும்
-ஜான் நாக்ஸ்

பத்திரிகை செய்திகள்

இந்திய அஞ்சல் துறை

அஞ்சல் துறையின் பல்வேறு சேவைகள்

(தொடர்ச்சி)

அஞ்சலக ஆயுள் காப்பீடு

8. கடன் வசதி: சுலபமான கடன் வசதி குறித்த கால காப்பீடு பாலிசியில் 3 ஆண்டுகள் கழித்தும், முழு ஆயுள் காப்பீடு பாலிசியில் 4 ஆண்டுகள் கழித்தும் கடன் பெறலாம். வருடத்திற்கு 10 சதவீதம் வட்டிகடன் பெற்றாலும் பாலிசிக்கு முழு போனஸ் கிடைக்கும்.

9. சரண்டர்: பாலிசி எடுத்த 36 மாதங்களுக்கு பின் EA பாலிசியாக இருந்தால் சரண்டர் செய்யலாம். முழு ஆயுள் பாலிசியாக இருந்தால் 48 மாதங்களுக்கு பின் சரண்டர் செய்யலாம். சரண்டர் மதிப்பு குறிப்பிட்ட விதிகளின் படி நிர்ணயிக்கப்படுகிறது. 5 வருடங்களுக்கு மேற்பட்ட பாலிசிகளுக்கு மட்டும் போனஸ் கணக்கில் எடுக்கப் படும்.

10. குழந்தைகள் பாலிசி: 45 வயதுக்குட்பட்ட PLI பாலிசிதாரர்கள் தங்களின் 5 முதல் 20 வயதுக்குட்பட்ட 2 குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் ஆளுக்கு ரூ.1 லட்சம் இன்சூரன்ஸ் செய்யலாம்.

11. ஜாயின்ட் லைப் பாலிசி எனும் திட்டத்தில் 45 வயதுக்குட்பட்ட கணவன் மனைவி சேரலாம்.

12. இறப்பு நேர்ந்தால் அஞ்சல் ஆயுள் காப்பீடு பாலிசி தொகை முழுவதும் போனசுடன் சேர்த்து வழங்கப்படும். உடனடியாக தங்கள் குடும்பத்தினர் விரும்பும் எந்த ஒரு அஞ்சலகத்திலும் பணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

13. தாங்கள் செலுத்தும் பிரீமியத் தொகைக்கு வருமான வரியில் இருந்து சட்டப்படி தள்ளுபடி சலுகை உண்டு.

14. மேம்படுத்தப்பட்ட கணிப்பொறி மூலம் தற்பொழுது கணக்குகள் நிர்வகிக்கப்படுகிறது.

15. எந்த ஊரில் பாலிசி எடுத்து இருந்தாலும் தாங்களோ, தங்கள் குடும்பத்தினரோ விரும்பும் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் கடன், முதிர்வுத்தொகை, இறப்புக்கான பணம் போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

2008-2009	முழு ஆயுள்	குறித்தகால காப்பீடு	எதிர்பார்ப்பு காப்பீடு
ரூ.1000 காப்பீட்டிற்கு	90	65	60

17. மத்திய அரசாங்கமே பாலிசி பத்திரம் வழங்குவதால் நம்பகத்தன்மை வாய்ந்தது மற்றும் வாரிசுதாரர் நியமன வசதியும் உண்டு.

18. இத்திட்டத்தில் சேர குறைந்தபட்சம் வயது 19, அதிகபட்ச வயது 55.

19. குறைந்தது ரூ.20 ஆயிரம்- அதிக பட்சம் ரூ.20 லட்சம் வரை எத்தனை பாலிசிகளாகவும் எடுக்கலாம்.

20. பணியில் இருந்து விலகி விட்டாலும் பாலிசியைத் தொடரலாம்.

21. முகவரி மாற்றம் இருப்பின் சம்பந்தப்பட்ட தபால் அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும்.

தமிழ்நாடு பெட்ரோல் விற்பனையாளர்களின் சங்கம் அறிவிப்பு

ஞாயிற்றுக் கிழமைகளில் பெட்ரோல் விற்பனை நிலையங்களுக்கு விடுமுறை

மே 14-ந் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது

சென்னை, ஏப்.19-

பிரதமர் நரேந்திரமோடி பதவியேற்றதும் மனதின் குரல் (மான் கீ பாத்) என்ற உரையில் 'போக்குவரத்து விதிகளிலும், எரிபொருள் சிக்கனத் திலும் மக்கள் தங்களது பங்களிப்பின் மூலம் புதிய இந்தியாவை உருவாக்கி முடியும் என்றும், பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருளினை வாரத்தில் ஒரு நாள் உபயோகப்படுத்தாமல், சிக்கன நடவடிக்கை மேற்கொண்டால் மேம்பட்ட இந்தியாவை உருவாக்கி முடியும்' என்று கூறி இருந்தார்.

பிரதமர் விடுத்த வேண்டுகோளினை ஏற்று பெட்ரோல் விற்பனையாளர்களான நாங்கள், பொதுமக்கள்பெட்ரோலிய பொருட்களை வாங்குவதை குறைப்பதற்காக, ஒவ்வொரு மாதமும் ஞாயிற்றுக் கிழமைகளில் பெட்ரோல் விற்பனை நிலையங் களுக்கு விடுமுறை அளித்து நாட்டிற்கு எங்களு டைய பங்களிப்பினை செலுத்த இருக்கிறோம்.

4,850 விற்பனை நிலையங்கள்

அதன்படி, அடுத்த மாதம் (மே) 14-ந் தேதி முதல் அகில இந்திய பெட்ரோலிய விற்பனையாளர் களின் கூட்டமைப்பின் அழைப்பினை ஏற்று ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் விற்பனை நிலையங்கள் இயங்காது என தெரிவித்துக் கொள் கிறோம். இதன் மூலம் ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 4 ஆயிரத்து 850பெட்ரோல், டீசல் விற்பனை நிலையங்கள் செயல்படாது. இந்த முடிவு எங்களுடைய விளிம்புத் தொகை உயர்வு குறித்த போராட்டத்திற்கானது அல்ல.

உலகளவில் இந்தியா எரிபொருள் வாங்கு வதில் 3-வது இடத்தில் உள்ளது. நமது நாட்டின் 21 மாநிலங்களிலும், 7 யூனியன் பிரதேசங்களிலும் நாள் ஒன்றுக்கு சுமார் 3 ஆயிரத்து 500 கோடிக்கான எரிபொருள் வாங்கப்படுகிறது. தமிழகத்தல் ஆண் டுக்கு சுமார் ரூ 56 ஆயிரம் கோடி மதிப்பிலான எரிபொருள் வாங்கப்படுகின்றது. இதில் ஒரு நாள் எரிபொருள் சிக்கனத்தை மேற்கொண்டால் ரூ.153 கோடி மதிப்பிலான எரிபொருள் மிச்சப்படும்.

அவசர தேவைக்கு. . .

இந்த முடிவின் மூலம் எதிர்கால சந்ததியி னருக்கு தூய்மையான, வளமான புதிய இந்தி யாவை ஒளிரச் செய்வதற்கான முயற்சியாக நாங்கள் கருதுகிறோம்.

தினத்தந்தி

Registered with the Registrar of News Paper For India under R.N.I. 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To